1992 பிப்ரவரி 4]

என்றுகூறியது எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. அதே நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு நாம் இருப்பது ஒரு புது யுகத்திலே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே இருக்கிறோம். எனவே இல்லை என்ற பேச்சுக்கு இடமில்லாமல், விஞ்ஞான ரீதியாக எத்தனையோ மாற்றங்கள் வந்துள்ள இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசிலனை செய்து குறைந்தபட்சம் மல்லிகைப் பூவை அதிகமாக உற்பத்தி செய்ய ஆவன செய்ய வேண்டும். மல்லிகை இதய நோய்க்கு அதிகமாக உதவுவதாக பல புத்தகங்களிலே நான் படித்திருக்கிறேன். அந்த வகையிலே மருத்துவ ரீதியாகவும் மல்லிகையை உற்பத்தி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கலாம். எனவே சென்ட் தொழிற்சாலை நிறுவுவது பற்றி மறுபரிசிலனை செய்து, அந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியின் புனித அரசு இதனைப் பரிசீலனை செய்ய இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 36, திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

36—

திருவான்மியூரில் பத்திரிகையாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம்.

* 442 திரு. டி. எம். ரங்கராஜன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, திருவான்மியூரில் பத்திரிகையாளர்களுக்காக நிலம் ஒதுக்கப்பட்டும், வீடு கட்டும் பணி நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அங்கு பத்திரிகையாளர்களுக்கு வீடு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1992 பிப்ரவரி 4

(அ) மற்றும் (ஆ) : சென்னை பத்திரிகையாளர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு திருவான்மியூரில் 5.50 ஏக்கர் நிலத்தை ரூ. 99.25 இலட்சத்திற்கு அரசு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக ஒதுக்கீடு செய்துள்ளது. அச்சங்கம் ரூ. 79.25 இலட்சத்தை வீட்டு வசதி வாரியத்திடம் ஏற்கெனவே செலுத்திவிட்டது. மீதமுள்ள ரூ. 20 இலட்சத்தை அரசு மானியமாக வழங்குவது பற்றிய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. வீட்டுவசதி வாரியத்தை அச்சங்கம் வீடு கட்டும்படி கேட்கவில்லை. சென்னை பத்திரிகையாளர் கூட்டுறவுச் சங்கத்தால் பத்திரிகையாளர்களுக்கு வீடு கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 37, திரு. எஸ். அன்பழகன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

37—

நாமக்கல்லில் பழரசம் மற்றும் ஜாம் தயாரிக்கும் தொழிற்சாலை

* 1742—திரு. எஸ். அன்பழகன் :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாமக்கல் நகரின் அருகிலுள்ள கொல்லிமலையில் உற்பத்தி யாகும் பழ வகைகளைக்கொண்டு நாமக்கல்லில் பழரசம் மற்றும் ஜாம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. முஹம்மது ஆசிப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் தொகுதிக்கு அருகில் உள்ள எருமைப் பட்டி ஒன்றியத்தில் சுற்றுப்புற கிராமங்கள் கொல்லிமலை அடிவாரப் பகுதியில் இருக்கின்றன. அங்கே உற்பத்தியாகும் பழ வகைகளை கொல்லிமலை உயரத்திற்குக் கொண்டு போகும் போது, சில நேரங்களில், குறிப்பாக மழைக் காலங்களில் போக்கு வரத்து வசதியும், சாலை வசதியும் பழுதடைந்து விடுவதால், அங்கே பழங்களைக் கொண்டு போக முடியவில்லை. எனவே தரைப் பகுதியான நாமக்கல்லில் அந்தத் தொழிற்சாலை வந்தால், அது சிறப்பாக நடைபெற வாய்ப்பாக இருக்கும். எனவே அடுத்த ஆண்டாவது அதைக் கொண்டுவர அரசு ஆவன செய் யுமா என்று அறிய விரும்புகிறேன்.